<u>தகவல் தொழில்நுட்பவியல் துறை</u>

# <u>2012–2013–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்</u>

**1) அனிமேஷன் மற்றும் கேமிங் துறையை வளர்த்தல் (Promotion of Animation and Gaming Industry)**

பொழுதுபோக்கு துறையில் அனிமேஷன் பிரிவு நன்கு வளர்ந்து வருகிறது. மல்டிமீடியா மற்றும் பொழுதுபோக்குத் துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த அனிமேஷன் மற்றும் கணினிவழி விளையாட்டு துறையை நமது மாநிலத்தில் வளர்ப்பதற்கு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** இத்துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்படும். இக்குழு இந்த அனிமேஷன் மற்றும் கணினிவழி விளையாட்டு துறையின் வளர்ச்சிக்கான திட்ட வரைபடத்தினை பரிந்துரை செய்யும்.

**2) அரசு ஊழியர்களுக்கு கணினிவழிப் பாடங்கள் (E-Learning Content for Government Employees)**

அரசு ஊழியர்களுக்கு கணினி தொடர்பான அடிப்படைப் பயிற்சி மற்றும் அலுவலக கணினிமயமாக்கல் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கணினிக்கல்வி தொடர்பான பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை தமிழ்நாடு தரவு மையத்தின் மூலம் இணையத்தில் வழங்கப்படும். இப்பாடங்களை அரசு ஊழியர்கள் படித்து அவர்களது கணினித் திறனை வளர்த்துக் கொள்ள இயலும்.

**3) துறைகளின் பயன்பாடுகளை மறு வடிவமைத்தல் (Redesigning of the Departmental applications)**

அரசுத் துறைகள் தங்கள் பயன்பாடுகளை மின் ஆளுமை சேவைகள் மூலம் செயல்படுத்தி வருகின்**றன.** அப்பயன்பாடுகள் பல்வேறு இயக்குதளங்கள் மற்றும் தொழில் நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. நமது மாநிலம் அனைத்து

சேவைகளையும் ஒருங்கிணைத்து வழங்க உத்தேசித்துள்ளதால் அரசுத் துறைகளின் பயன்பாடுகளை மறுவடிவமைத்திட வேண்டியுள்ளது. ஆகவே, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் சேவைகள் வழங்கிட ஏதுவாக பல்வேறு துறைகளின் பயன்பாடுகள் படிப்படியாக திறந்த தர நிலைக்கு இணக்கம் கொண்டதாக உருவாக்கப்படும்.

**4) இணைய நெறிமுறை பதிப்பு–6 – திறன் மேம்படுத்துதல் (Capacity building for Internet Protocol Version-6)**

பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இணைய நெறிமுறையினால் இணையதளம் இன்று கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. தற்போதுள்ள இணைய நெறிமுறை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட இணைய நெறிமுறை பதிப்பு–4 **(IPv4)** ஆகும். தகவல் தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியினால், இணைய நெறிமுறை பதிப்பு 4 **(IPv4)**–ன் இணைய முகவரிகள் விரைவில் முடிந்து விடும் நிலை ஏற்பட்டு உள்ளது. **IPv4-**லிருந்து **IPv6-**க்கான மாற்றமானது இணைய முகவரிகளுக்கான தட்டுப்பாட்டினை நீக்கி எண்ணிலடங்கா இணைய முகவரிகளை உருவாக்கக்கூடிய திறன் வாய்ந்ததாக இருக்கும். எனவே **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இணைய நெறிமுறை பதிப்பு–6 **(IPv6)** பயன்பாட்டுக்கு அனைத்து துறைகளும் மாறிட தேவையான பயிற்சி அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும்**.**

**முக்கூர் என். சுப்பிரமணியன்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்